**செய்தி வெளியீடு எண் :1614** **நாள் : 10.08.2023**

**ஆகஸ்ட் 10, 1948 – ஆதிக்க இந்திக்கு எதிராக மொழிப்போராட்டம் தொடங்கிய இந்நாளில், இனமானம் காக்கவும் – மொழி உரிமையை நிலைநாட்டவும் உழைத்த பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு**

ஆகஸ்ட் 10 – ஆதிக்க இந்திக்கு எதிராக 1948–ஆம் ஆண்டு மொழிப்போராட்டம் தொடங்கிய நாள் இன்று. வரலாற்றில் இரண்டாவது மொழிப் போராட்டத் தொடக்கநாளாகவும் பதிவாகி உள்ளது.

இனமானம் காக்கவும் – மொழி உரிமையை நிலைநாட்டவும் எந்நாளும் உழைத்த இனமானப் பேராசிரியப் பெருந்தகையின் முழு உருவச் சிலையை சென்னை நுங்கம்பாக்கத்தில் அவரது பெயரால் அமைந்துள்ள கல்வி வளாகத்தில் இன்று திறந்து வைத்தேன்.

பேராசிரியப் பெருந்தகையின் சிலை அமைக்கப் பொருத்தமான இடமும் – பொருத்தமான நாளும் இதைத் தவிர வேறு இருக்க முடியாது.

**கல்வியில் – பகுத்தறிவில் – சுயமரியாதை உணர்வில் சிறந்த தமிழ்நாட்டைக் கட்டி எழுப்ப பேராசிரியப் பெருந்தகை சிலை முன்பு உறுதி ஏற்கிறோம்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in